காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.ந.சங்கரன், B.Com.,H,D.C.M,

ந.க.எண்.8459/2025/எப்1, நாள்.24.03.2026

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – காரைக்குடி மாநகராட்சி – தளக்காவூர் (மானகிரி), கீரணிப்பட்டி கிராமம் சர்வே எண். 99/1A, 99/2B & 100/1– 16900 ச.மீ (அ) 4.17 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – மனைப்பிரிவில் அடிப்படை வசதி செய்துள்ளது மற்றும் உரிய கட்டணங்கள் செலுத்தியது – மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மாவட்ட நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர், சிவகங்கை அவர்களின் ந.க.எண். MC3WCASS/2025/TCP & L.P.(SWP) / DTCP/ SIVAGANGAI No:159 /2025, நாள்.11.11.2025
2. தங்களது விண்ணப்பம் நாள்.20.11.2025 மற்றும் 26.02.2026
3. இவ்வலுவலக மாநகரப்பொறியாளர் குறிப்பு நாள்.06.03.2026.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு, நாள்.11.03.2026

உத்தரவு :

காரைக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தளக்காவூர் (மானகிரி), கீரணிப்பட்டி கிராமம் சர்வே எண். 99/1A, 99/2B & 100/1– 16900 ச.மீ (அ) 4.17 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட இடத்தில் மனைப்பிரிவு அமைக்க, பார்வை–1 இல் காணும், சிவகங்கை, மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் ந.க.எண். MC3WCASS/2025/TCP & L.P.(SWP) / DTCP/ SIVAGANGAI No:159/2025, நாள்.11.11.2025–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கியதை இணைத்து பார்வை–2 இல் காணும் தங்களது மனு வரப்பெற்றது. மேற்படி, இடம் ஆய்வு செய்யப்பட்டது. மனைப்பிரிவில் அனைத்து சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில், தார்சாலைகள் (4.50 மீ அகலம்) மழைநீர் வடிகால்கள், சந்திப்பு சாலைகளில் ஆர்.சி.சி கான்கீரிட் பாலங்கள் ஆகியவை நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சோலார் தெருவிளக்குகள் அனைத்து சாலைகளிலும் அமைக்கப்பட்டு அடிப்படை வசதி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாநகரப்பொறியாளர் அவர்கள் பார்வை–3 இல் காணும் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை–4 இல் காணும் அறிவிப்பின்படி, மேற்படி, மனைப்பிரிவிற்கு காரைக்குடி மாநகராட்சி கருவூலத்தில், கீழ்காணும் விவரப்படி, மனைப்பிரிவு அனுமதி கட்டணங்கள் தங்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு பராமரிப்பு வைப்புத்தொகை	ரூ.5,00,000/–	சலான் எண்.25516 நாள்.16.03.2026
ஆய்வுக் கட்டணம்	ரூ.10,000/–	சலான் எண்.25517 நாள்.16.03.2026
மனைப்பிரிவு அங்கீகாரக்கட்டணம்	ரூ.1,00,000/–	சலான் எண்.25518 நாள்.16.03.2026
வளர்ச்சி கட்டணம்	ரூ.50,000/–	
மொத்தம்	**ரூ.6,60,000/–**	

எனவே, காரைக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தளக்காவூர் (மானகிரி), கீரணிப்பட்டி கிராமம் சர்வே எண். 99/1A, 99/2B & 100/1– 16900 ச.மீ (அ) 4.17 ஏக்கர் பரப்பளவுக் கொண்ட இடத்தை 85 மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில், (1) உத்தேச சாலைகளின் பரப்பளவு– 5643.19 ச.மீ (2). உள்ளாட்சி உபயோக மனை –70.15 ச.மீ மற்றும் (3). பூங்கா – 1132.78 ச.மீ ஆகிய இடங்கள் பதிவு செய்யப்பட்ட நன்கொடை பத்திரம் ஆவணம் எண்.10101/2025, நாள்.04.11.2025 ஒப்படைப்பு செய்யப்பட்டு உள்ளது. எனவே, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவினை சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு, அமைத்துக்கொள்ள இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2/6

ஆணையாளர், 24/3/2026
காரைக்குடி மாநகராட்சி.

24/3/26 24/03/2026 24/03/2026

பெறுநர்
திரு.எம்.மெய்யப்பன்,
எண்.41/10, மெய்யம்மை இல்லம்,
கீழத்தெரு, கண்டனூர் ரோடு,
காரைக்குடி.